**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----

**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, VIRUDHUNAGAR**

Sessions .. .. Sessions Case No. 121 of 2024

Deposition of witness for { Prosecution PW1
Defence
Court

Name : ராஜேஸ்வரி
Father Name : சோலையப்பன்
Village :காரியாபட்டி
Taluk :காரியாபட்டி
Caste :
Calling :
Religion :
Age :34

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day of January 2026.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை -**

**1)** நான் தற்போது காரியாபட்டி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 17.06.2022ம் தேதி மாலை 4.30 மணியளவில் நானும், காரியாபட்டி சார்பு ஆய்வாளர் அசோக்குமார், முதல்நிலை காவலர் ரமேஷ் குமார் ஆகியோர்கள் புகையிலை தடுப்பு சம்மந்தமாக சார்பு ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் கே.செவல்பட்டி பஸ்ஸ்டாப் அருகே உள்ள பெட்டிக்கடையில் ஆஜர் எதிரி நின்று கொண்டிருந்தார். அவரை விசாரிக்கையில் தன் பெயர் மீனாட்சி என்று சொன்னார். ஆஜர் எதிரி சார்பு ஆய்வாளர் விசாரணையில் தானாக முன்வந்து கணேஷ் 701 புகையிலை 12 பாக்கெட்டுகள், கூலிப் புகையிலை 15 பாக்கெட்டுகள் எடுத்து ஆஜர் செய்தார்.

2) மனித உயிருக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய மேற்படி புகையிலை பாக்கெட்டுகளை சார்பு ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினார்.

மேற்படி அத்தாட்சியில் தனிநபர்கள் யாரும் கையொப்பம் செய்ய முன்வராததால் நானும், எங்களுடன் வந்த முதல் நிலை காவலர் ரமேஷ்குமார் ஆகியோர்கள் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள இரண்டாம் கையெழுத்து என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.1** ஆகும். கணேஷ் 701 புகையிலை 12 பாக்கெட்டுகள் **சா.பொ.1** ஆகும். கூலிப் புகையிலை 15 பாக்கெட்டுகள் **சா.பொ.2** ஆகும். எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரி மீது வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். வழக்கு சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

3) அத்தாட்சியில் நானும், முதல் நிலை காவலர் ரமேஷ் குமார் மற்றும் சார்பு ஆய்வாளர் கையொப்பம் செய்தோம். சார்பு ஆய்வாளர் அத்தாட்சியில் கையொப்பம் செய்ததை நான் பார்க்கவில்லை. சம்பவ இடத்தில் வைத்து அத்தாட்சியில் சார்பு ஆய்வாளர் அசோக்குமார் கையொப்பம் செய்யவில்லை என்றும் அவர் கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் இருந்த போது சார்பு ஆய்வாளருக்கு ரகசிய தகவல் வந்தது. காவல்நிலையத்தில் இருந்து மாலை 4.20 மணியளவில் ரோந்துக்கு புறப்பட்டோம். காவல்நிலையத்தில் இருந்து சம்பவ இடமானது நேரான சாலை ரோடு என்றால் சரிதான். அன்றைய தினம் வேறு எங்கும் ரோந்து செல்லவில்லை, நேராக எதிரியின் கடைக்கு சென்றோம்.

4) ரகசிய தகவலை பொதுநாட்குறிப்பில் பதிவு செய்துவிட்டு செல்ல வேண்டும் என்றால் அது பற்றி தெரியவில்லை. நான் என் இருசக்கர வாகனத்தில் சென்றேன். சார்பு ஆய்வாளர் மற்றும் முதல்நிலை காவலர் ரமேஷ் குமார் ஒரு இருசக்கர வாகனத்தில் சென்றோம். சம்பவ இடம் சுமார் 1.1/2 கிமீ தூரம் இருக்கும். சம்பவ இடம் அருப்புக்கோட்டை செல்ல கூடிய பழைய

செவல்பட்டி ரோடு என்றால் சரிதான். சம்பவ இடம் மக்கள் அதிகம் நடமாடும் பகுதி என்றும், அங்கு கடைகள் உள்ளது என்றால் சரிதான். எதிரியை கைது செய்த போது அங்கு சுமார் 10 நபர்கள் கூடியிருந்தனர். அங்கு கூடியிருந்த நபர்களை சாட்சியாக இருக்கும் படி சார்பு ஆய்வாளர் கேட்டார். யாரும் சாட்சியாக இருக்க முன்வரவில்லை என கூறினார்கள்.

5) சாட்சியாக அழைத்த நபர்கள் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. எதிரி கடைக்கு உள்ளே இருந்தார். நான் எதிரியை சோதனை செய்தேன். வழக்கு சொத்துக்களை கடையில் வைத்திருந்தார். எதிரியின் கடையை சார்பு ஆய்வாளர் மற்றும் முதல்நிலை காவலர் சோதனை செய்தார்கள். புகையிலை பொருட்களை விற்ற பணம் எதுவும் கைப்பற்றப்படவில்லை. நாங்கள் சென்ற போது கடையில் பொருட்கள் வாங்க 3 ஆண் நபர்கள் இருந்தார்கள். சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட பொருட்களின் விபர பட்டியல் தயார் செய்யப்பட்டதா என்றால் அது பற்றி சார்பு ஆய்வாளருக்கு தெரியும். காவல்நிலையத்தில் இருந்து ரோந்து செல்லும் போது பேனா, பேப்பர், பேடு உள்ளிட்ட பொருட்களை எடுத்து சென்றோம்.

6) சார்பு ஆய்வாளர் தனது முத்திரையை எடுத்து வந்தாரா என்று தெரியாது. படிவம்–91 காவல்நிலையத்தில் தயார் செய்யப்பட்டது. அதில் நான் கையொப்பம் செய்யவில்லை. புகையிலை பொருட்கள் மாதிரி எடுக்கப்பட்டதில் நான் கையொப்பம் செய்யவில்லை. பொதுமக்கள் யாரும் புகையிலை பொருட்களை விற்றதாக புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். புகையிலை பொருட்களை பயன்படுத்தியதால் மனித உயிருக்கு தீங்கு ஏற்பட்டதாக யாரும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் புகார்தாரர் சார்பு ஆய்வாளர் என்பதாலும், விசாரணை அதிகாரி காவல் ஆய்வாளர் என்பதாலும் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சொன்ன தேதி, நேரத்தில் சம்பவ இடம்

செல்லவில்லை என்றும், எதிரியிடம் இருந்து வழக்கு சொத்துக்கள் எதுவும் அத்தாட்சியில் கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

7) சம்பவ இடத்தில் வைத்து பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வேறு வழக்கில் கைப்பற்றப்பட்ட புகையிலை பொருட்களை வைத்து எதிரி மீது பொய்யாக இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----

**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, VIRUDHUNAGAR**

Sessions .. .. Sessions Case No. 121 of 2024

Deposition of witness for { Prosecution PW3
Defence
Court

Name : வெங்கிடசாமி
Father Name : கந்தவேல்
Village :அயன்ரெட்டியபட்டி
Taluk :காரியாபட்டி
Caste :
Calling :
Religion :
Age :40

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day of January 2026.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை -**

1) நான் தற்போது காரியாபட்டி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 03.01.2023 ம் தேதி நான் காரியாபட்டி காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியில் இருந்த போது நிலைய குற்ற எண்.148/2022 வழக்கில் கைப்பற்றப்பட்ட புகையிலை பொருட்களின் மாதிரியை சென்னை மயிலாப்பூரில் உள்ள தடய அறிவியல் ஆய்வகத்திற்கு கொண்டு சென்றேன். 04.01.2023 ம் தேதி புகையிலை மாதிரியை ஒப்படைத்தேன். பின்னர் 05.01.2023 ம் தேதி நிலையம் வந்து அது சம்மந்தமாக அறிக்கை செய்தேன். இது சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

***எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–***

2) என்னை சார்பு ஆய்வாளர் விசாரித்தார். பகுப்பாய்விற்கு மாதிரியை ஒப்படைக்க எனக்கு எழுத்துமூலமாக உத்தரவு வழங்கப்பட்டது என்றால் பாஸ்போர்ட் கொடுக்கப்பட்டது. எழுத்துமூலமாக எனக்கு எந்த உத்தரவும்

**வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. எனது சாட்சி ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல.**

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, VIRUDHUNAGAR**

Sessions .. .. Sessions Case No. 121 of 2024

Deposition of witness for { Prosecution PW2
Defence
Court

Name : ரமேஷ்குமார்
Father Name : முருகன்
Village :நெடுங்குளம்
Taluk :சோழவந்தான்
Caste :
Calling :
Religion :
Age :40

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day of January 2026.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை -**

1) நான் தற்போது மல்லாங்கிணறு காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 17.06.2022ம் தேதி மாலை 4.30 மணியளவில் நானும், காரியாபட்டி சார்பு ஆய்வாளர் அசோக்குமார், முதல்நிலை காவலர் ராஜேஸ்வரி ஆகியோர்கள் புகையிலை தடுப்பு சம்மந்தமாக சார்பு ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் கே.செவல்பட்டியில் உள்ள சித்தையன் மனைவியான ஆஜர் எதிரியின் கடைக்கு சென்று சார்பு ஆய்வாளர் புகையிலை விற்பது சம்மந்தமாக எதிரியை விசாரணை செய்தார். எதிரி தானாக முன்வந்து கணேஷ் 701 புகையிலை 12 பாக்கெட்டுகள், கூலிப் 15 பாக்கெட்டுகளை எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி வழக்கு சொத்துக்களை சார்பு ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.2** ஆகும்.

2) பொதுமக்கள் யாரும் அத்தாட்சியில் சாட்சியாக இருக்க முன்வராததால் நானும், முதல்நிலை காவலர் ராஜேஸ்வரியும் மேற்படி அத்தாட்சியில் சாட்சியாக கையொப்பம் செய்தோம். கணேஷ் 701 புகையிலை 1 பாக்கெட்டும், கூலிப் 1 பாக்கெட்டும் பகுப்பாய்விற்காக எடுக்கப்பட்டது. அதில் நானும், அ.சா.1 மற்றும் சார்பு ஆய்வாளரும் கையொப்பம் செய்தோம். எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரி மீது வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். இது சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

3) எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லும் புகையிலை பொருட்கள் அனைத்தும் பேக்கிங் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பாக்கெட்டுகளில் நான்குபுறமும் அடைக்கப்பட்டுள்ளதால் அதன் உள் வேறு பொருட்களை போட இயலாது என்றால் சரிதான். மேற்படி பாக்கெட்டுகளை கிழித்தோ அல்லது வெட்டி பார்த்தால் தான் உள்ளே உள்ள பொருட்கள் தெரியும் என்றால் சரிதான். அதனால் பாக்கெட்டுகளை வைத்து மட்டும் பார்க்கும் போது அதில் கலப்படம் செய்ய வாய்ப்பில்லை என்றால் சரிதான். நாங்கள் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பொருட்கள் எதுவும் உடைத்து இருக்கவில்லை என்றால் சரிதான். காவல்நிலையத்தில் இருந்து ரோந்து செல்லும் போது எடை மிசன் எடுத்து சென்றோம்.

4) சம்பவத்திற்கு பின்னர் வழக்கு சொத்துக்களை எடை போடவில்லை, எடை விபரம் மேற்படி பாக்கெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பவ இடத்தில் வைத்து புகையிலை பொருட்களில் இருந்து மாதிரிகளை எடுத்தோம். மேற்படி மாதிரியை காகித பேப்பரில் உரிய முறையில் பேக்கிங் செய்தோம். சம்பவ இடத்தில் வைத்து மேற்படி பேக்கிங் செய்யப்பட்ட மாதிரிகளில் சார்பு ஆய்வாளர் கையொப்பம் செய்து முத்திரை வைத்தார். நான் சொன்னது போல் சார்பு

ஆய்வாளர் முத்திரையை காவல்நிலையத்தில் இருந்து எடுத்து செல்லவில்லை என்றும், சம்பவ இடத்தில் வைத்து மாதிரியில் முத்திரை இடப்படவில்லை என்றால் சரியல்ல. பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து சார்பு ஆய்வாளர் முத்திரை வைத்தோம் என்றால் சரியல்ல.

5) ரோந்து பணிக்காக காவல்நிலையத்தில் இருந்து வெளியே வரும் போது சார்பு ஆய்வாளருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அத்தாட்சியை சார்பு ஆய்வாளர் எழுதினார். நானும், சார்பு ஆய்வாளர் ஒரு இருசக்கர வாகனத்திலும், அ.சா.1 ஒரு இருசக்கர வாகனத்திலும் சென்றோம். எதிரியை கைது செய்யும் போது கூட்டம் இல்லை, விசாரணை செய்த போது 4, 5 பேர் இருந்தனர், அவர்கள் பெயர் எனக்கு தெரியாது. எதிரியை எனக்கு ஏற்கனவே தெரியாது. இவ்வழக்கில் புகார்தாரர் சார்பு ஆய்வாளர் என்பதாலும், விசாரணை அதிகாரி காவல் ஆய்வாளர் என்பதாலும் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சொன்ன தேதி, நேரத்தில் சம்பவ இடம் செல்லவில்லை என்றும், எதிரியிடம் இருந்து வழக்கு சொத்துக்கள் எதுவும் அத்தாட்சியில் கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

6) சம்பவ இடத்தில் வைத்து பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வேறு வழக்கில் கைப்பற்றப்பட்ட புகையிலை பொருட்களை வைத்து எதிரி மீது பொய்யாக இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.